# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2006, ஒகத்து மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2006 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக் கமர்த்துதல் (திருத்தச்) சட்டம்**

[2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 22/2005

**1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.

1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தில் 20அ எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**2.** பின்வரும் புதிய பிரிவானது, 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளை களையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20 ஆம் பிரிவை உடன டுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டத்தின் 20அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :—

"பதினெட்டு வயதின் கீழான ஆட்கள் ஆபத்தான தான்புரி தொழிலில் தொழிலுக் கமர்த்தப் படுவதற்கான தடை.

20அ. (1) பதினெட்டு வயதிற்குக் கீழான ஆளெவரும் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் வழிகாட்டு நெறிகளுக்கிணங்க விதித்துரைக்கப்பட வேண்டியதான ஏதேனும் ஆபத்தான தான்புரி தொழிலில் தொழிலுக்கமர்த்தப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, ஆபத்தான தான்புரி தொழிலை விதித்துரைப்பதில் அமைச்சரானவர், அத்தான்புரிதொழிலில் எத்தன்மையிலும் அல்லது எச்சூழ்நிலைகளிலும் நிறைவேற்றப்படுகின்றது என்பதையும் அதன் விளைவாக, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட ஆள் ஒருவரின் உடல்நலம், காப்பு அல்லது ஒழுக்கத்திற்கு விளைவிக்கப்படக்கூடிய தீங்கையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை மீறி பதினெட்டு வயதிற்குட்பட்ட ஆளொருவரை தொழி லுக்கமர்த்துகின்ற ஆளெவரும், தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவ தன் மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங் களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகை யிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். அத்துடன் மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டி ருக்கின்றதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை நட்டஈடாகச் செலுத்தப்படவேண்டு மென்று கட்டளை இடப்படுதலும் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*